**கமநல அபிவிருத்தி நிதியம் - 2023**

-----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கான தாக்கங்கள் தவிர நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்படுவதுடன், தொடர்ந்தியங்கும் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு

செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் நிதியம் செயற்பட்டிருந்தது என்பதும், வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 20 சதவீதமாகிய ரூபா 6,252,404 தொகையான ஏக்கர் வரி பங்களிப்புத் தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய மேலும் அறவிட வேண்டியவை என சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 7,205,581 இற்கான தொகை பெற வேண்டிய ஏக்கர் வரி வருமானத்துடன் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டது. | ஆண்டிற்கான வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த டிரக்டர் மற்றும் நீர்ப் பம்பு வருமானம் ஆகிய ரூபா 7,784,846 தொகை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறிப்பிட்ட சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு இந்தத் தவறினை சரிசெய்யும் படி உரிய தரப்பினருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வருமானம் சரியாக சீராக்கல் மேற்கொள்ளப்படும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது டிரக்டர் ஏல விற்பனை வருமானத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 4,776,277 இற்கான தொகை ஒன்றித்த நிதியத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் நிதியத்தின் வருமானம் ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஒன்றித்த நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய வருமானத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் ஏடுகளின் படி வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 369,653,301 தொகை எனினும் திறைசேரி ஏடுகளின் படி அந்த மீதி ரூபா 370,305,448 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 652,147 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | 2008 ஆண்டின் திணைக்கள பிரதான கணக்குகள் மற்றும் கமநல அபிவிருத்தி நிதியத்தின் கணக்குகளை இணைத்துள்ளதுடன் அவ்வாறு இணைப்பதற்கு முன்னர் ரூபா 651,797 இற்கான வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. அதற்குரிய ஆவணங்கள் மிகவும் பழமையானவையாக காணப்பட்டமையால் அந்த ஆவணங்களை கண்டறிவதில் காணப்படும் மிகுந்த கடினத் தன்மை மற்றும் அதற்காக பாரிய காலவரையறை ஒன்று எடுக்கும் என்ற காரணத்தினால் இந்த வித்தியாசத்தை தீர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் சீராக்கல் மேற்கொள்ளல் இது வரை தாமதம் அடைந்துள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இத் தவறினை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | வித்தியாசத்தை இனங்கண்டு தீர்க்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீர்ப் பம்பு கடன்பட்டோர் கணக்கில், டிரக்டர் கடன்பட்டோர் | இந்த வித்தியாசம் 2024 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி | நிதிக்கூற்றுக்களின் மீதிகளுடன் அட்டவணைகளின் |

| | | |
|---|---|---|
| கணக்கு பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய அனுமதிப் பத்திரக் கணக்கு ஆகிய பேரேட்டுக் கணக்குகளின் மீதிகள் மற்றும் அட்டவணைகளின் படி மீதிகள் இடையே ரூபா 24,695,561 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | மீதிகள் சமமாக இருக்க வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 94,705,118 தொகைக் கிரயத்தையுடைய ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக சொத்துக்கள் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு இருக்காததுடன் அட்டவணையும் சமர்ப்பித்திருக்காமையால் சரியான தன்மை உறுதிப்படுத்த முடியவில்லை. | 2024 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது குறிப்பிட்ட அட்டவணைகள் சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான அட்டவணைகள் பேணப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல சேவை நிலையங்கள் மற்றும் விவசாய அமைப்புக்களுக்கு 2010 ஆண்டின் போது வழங்கியிருந்த டிரக்டர் டேலர்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 4,112,575 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தவணைகளை அறவீடு செய்வதற்காக கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களில் உரிய தரப்பினர் அறிவுறுத்தி ஆலோசனை வழங்கி இருந்ததுடன் அதற்குரிய தவணைப் பணங்கள் அறவிடப்படல் வேகம் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும் தற்போது தவணை முறையில் அறவீடு செய்யப்படுகின்றது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | யப்பான் யென் உதவிச் செயற்திட்டத்தின் கீழ் வழங்கியிருந்த 02 சில்லு டிரக்டர்களுக்காக அறவீடு செய்யப்பட வேண்டிய பணம் 2015 ஆண்டளவில் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 105,097,886 இற்கான தொகையொன்று விவசாயிகளிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடன்பட்டோர் மீதியில் அடங்கியுள்ள 5 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 2,433,883 இற்கான 2KR செயற்திட்டத்தின் நீர்ப் பம்பு தவணைகள் ரூபா 19,240,247 இற்கான 04 சில்லு டிரக்டர் தவணை மீதியினை விவசாயிகளிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. நி.பி. 371(2) | 2019 ஆண்டின் போது பெற்றிருந்த ரூபா 170,000 தொகையும் மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த ரூபா 574,460 இற்கான முற்பணத் தொகையும் பிரமாணங்களுக்கு இணங்க தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நிமித்தக் கட்டுநிதி 2024 ஆண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | நிமித்தக் கட்டுநிதி வழங்கப்பட்ட கருமம் பூர்த்தியடைந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. நி.பி. 633(1) | ரூபா 23,804,800 தொகை பெறுமதியான 60,000 அடியிதழ் புத்தகங்கள் பிரமாணங்களுக்கு முரணாக தனியார் அச்சு நிறுவனங்களில் இருந்து அச்சிடப்பட்டிருந்தது. | அடியிதழ் புத்தகங்கள் அச்சிடுவதற்காக (நிதி முக்கியத்துவமுடைய அடியிதழ் புத்தகங்கள்) வாய்மொழி மூலமாக அரச அச்சகத்தை வினவியதுடன் எம்மால் கோரப்பட்ட திகதியில் புத்தகங்களை அச்சிடுவதற்கு இயலுமை காணப்படவில்லை என கூறப்பட்டது. அதன் காரணமாக புத்தகங்களை அச்சிடுதல் தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் குறிப்பிட்ட அச்சு அலுவல்கள் மேற்கொள்ளல் தொடர்பாக நி.பி.633 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்க குறிப்பிட்ட | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் படி பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | |
| | iii. நி.பி. 876(3) | பிரமாணங்களுக்கு இணங்க நியதிச் சட்டம் சாராத நிதியங்களை முடிவுறுத்துவது அல்லது தொடர்ந்தும் பேணிச் செல்லல் நியாயமான காரணம் காணப்படின் பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் சட்டரீதியாக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்திற்காக அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | தற்போது திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அங்கீகாரம் கிடைத்த பின்னர் கமநல அபிவிருத்தி நிதியத்திற்காக கணக்கொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களின் படி நிதியங்கள் பேணிச் செல்லல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 திகதிய 842 இலக்கம் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 94,705,118 தொகைக்கான ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டு இருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 94,705,118 தொகைக்கான ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிவிக்கின்றேன். | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 49,228,195 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 49,078,658 தொகை ஆக இருந்தது. அதன் படி செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 149,537 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் தொழிற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டு பாதீட்டு பிரேரணை ஒன்றின் படி பசுமை இல்லங்கள் நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த தொழில் முனைபவர்கள் இடையே புத்தளம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 5 | புத்தளம் மாவட்டத்தில் பசுமை இல்லம் செயற்திட்டத்திற்காக வெளிக்கள பரிசோதனை ஒன்று மேற்கொண்டு சாத்தியக்கூறு ஆய்வு செய்த பின்னர் முதலீடு செய்வதற்காக விவசாயிகள் | ஏற்பாட்டுத் தொகை உச்சமட்ட ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில் முனைபவர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 5,000,000 இற்கான தொகை எதுவித கருமத்திற்கும் பயன்படுத்தாமல் திரும்ப தலைமை அலுவலகத்திற்கு வருட இறுதியில் வழங்கியிருந்தது. அதன் படி அந்த பாதீட்டு பிரேரணை உரிய முறையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தெரிவு செய்யப்பட்டனர். இறுதிக் கட்டத்தில் உடன்படிக்கை மேற்கொள்வதற்காக விவசாயிகளின் பங்களிப்புத் தொகையான ரூபா 1,000,000 தொகையினை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்வதற்கு மறுத்த காரணத்தினால் 5 பேருக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணம் கணக்கிற்கு செலவு வைத்தலை இடைநிறுத்துவதற்கு நேரிட்டது. வேறு விவசாயிகளை தேடி உடன்படிக்கை மேற்கொண்டு இந்தப் பணத்தை முதலீடு செய்வதற்கு போதிய காலமொன்று காணப்படாமையால், வருட இறுதியில் மீண்டும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. | |
| (ஆ) | 2022 ஒக்தோபர் மாதத்தில் ரூபா 30,970,000 இற்கான கிரயமொன்று மேற்கொண்டு கமநல சேவைக் குழுக்கள் மற்றும் விவசாய வங்கிகளுக்காக முகாமைத்துவ தகவல் முறைமையொன்று தயாரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 05 கட்டங்களின் கீழ் 7 மாதங்களுக்குள் குறிப்பிட்ட கருமம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதி வரை குறிப்பிட்ட கருமம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கமநல சேவை குழுக்கள் மற்றும் விவசாய வங்கிகளுக்காக முகாமைத்துவ முறைமையொன்று நிறுவும் அலுவல்கள் 2022 ஆண்டின் ஒக்தோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த கணினி முறைமையை நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் ஏற்பட்டிருந்த பல செய்முறைசார் சிக்கல்கள் காரணமாக எதிர்பார்த்த இலக்கினை நெருங்குவதற்கு முடியாமல் போனது. எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ளவாறு கணினி முறைமை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் முகாமைத்துவ தகவல் முறைமையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள புதிய விவசாய கொள்கைகளை வினைப்படுத்தலின் கீழ் கமநல சேவைக் குழுக்கள் மற்றும் விவசாய வங்கிகளுக்கு இணைய சேவைகளுக்காக ரூபா 12,000,000 இற்கான ஏற்பாடொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இணைய சேவையை பெற்றுக் கொள்வதற்காக 2023 ஜூலை 07 திகதி ரூபா 1,570,000 தொகை கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் | தற்போது கணினி மென்பொருள் பரீட்சாத்த மட்டத்தில் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் இந்த கணினி முறைமையை நிறுவி செயற்படுத்துவதற்கு அலுவல்கள் திட்டமிடப்பட்டுள்ளது. | கமநல சேவை குழுக்கள் மற்றும் விவசாய வங்களுக்காக இணைய சேவை மற்றும் கணினி முறைமை நிறுவுதல் உரிய முறையில் குறிப்பிட்டவாறு நிறுவுவதற்கு உரிய தினத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | இருந்து மற்றும் விவசாய வங்கிகளுக்கு சொந்தமான பணத்திலிருந்து பாதுகாப்பு பிணைமுறிக்காக 2023 ஜுன் 28 திகதி ரூபா 2,200,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் கருமம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 10 வருடங்களை விட பழமையான ரூபா 450,000 இற்கான இருப்புப் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | இந்த இருப்புப் பற்றாக்குறை 1996 ஆண்டு முதல் விவசாய அபிவிருத்தி நிதியத்தின் இறுதிக் கணக்குகளில் காட்டப்படுவதுடன் இது தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்கு நியமனம் செய்யப்பட்ட குழுவினால் இதனோடு தொடர்புடைய தரப்பினர்களுடன் விசாரணை ஒன்று நடாத்துதல் பொருத்தமானது என பரிந்துரைக்கப்பட்டது. இது தொடர்பாக ஒழுக்காற்றுப் பிரிவை அறிவுறுத்தி அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவேன். | தேவையான விசாரணைகள் மேற்கொண்டு நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். |
| (உ) | 2010 ஆண்டின் போது யப்பான் யென் உதவியின் கீழ் அநுராதபுர மாவட்டத்தில் மருதன்கடவெல கமநல சேவை நிலையத்திற்கு வழங்கியிருந்த ரூபா 355,000 தொகை பெறுமதியான 02 சக்கர 02 டிரக்டர் வண்டிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படாமல் விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளரினால் பயன்படுத்தும் மற்றும் தனதுரிமையில் வைத்திருந்த அந்த பெண் உத்தியோகத்தருக்கு எதிராக 2016 மார்ச் 10 திகதி ஒழுக்காற்று அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2021 ஜனவரி 14 திகதி இந்த பெண் உத்தியோகத்தர் ஓய்வூதிய ஒழுங்கு விதிக் கோவையின் 2 மற்றும் 12 பிரிவின் கீழ் ஓய்வுபெறச் செய்யப்பட்டிருந்ததுடன் டிரக்டர்களின் கிரயம் 2024 பெப்ரவரி 28 திகதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | தற்போது இது தொடர்பாக ஒழுக்காற்று பிரிவினால் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுப்பதற்காகுத் தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தாமதமின்றி ஒழுக்காற்று செயற்பாடுகளை பூர்த்தி செய்தல் மற்றும் நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கமநல அபிவிருத்தி நிதியத்திற்குரிய ஏக்கர் வரி தொடர்பாக தலைமை அலுவலகத்தில் ஏக்கர் வரி செலுத்த வேண்டிய காணிகள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டு இருக்காமையால் மாவட்ட அலுவலகங்களிலிருந்து அனுப்பப்படும் 20 சதவீத ஏக்கர் வரி பங்களிப்பு தொகை சரியாக அனுப்பப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் இருந்தது. நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்கள் முறைமையொன்றும் செயற்படுத்தியிருக்கவில்லை. | ஏக்கர் வரி வருமானம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் குறிப்பிட்ட காணி அமைந்துள்ள கமநல அபிவிருத்திக் குழுவிற்கு சொந்தமாக காணப்படுவதுடன் அனைத்து அறவீடுகளும், குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த அறவீடுகள் தொடர்பான முழுமையான விபரம் அடங்கிய பதிவேடொன்று குறிப்பிட்ட குழுவினால் பேணப்பட்டு வருகின்றது. இந்தப் பதிவேடு இலங்கை பூராகவும் பரவியுள்ள 565 கமநல அபிவிருத்தி நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த 565 குழுக்களினால் பேணப்படுகின்ற பதிவேட்டினை ஒன்றிணைத்து தலைமை அலுவலகத்தில் பதிவேடொன்று பேணிச் செல்லல் செயற்பாட்டு ரீதியானதல்ல. இலங்கை பூராகவும் பரவியுள்ள இலட்சக் கணக்கான காணிகளை ஒரு பதிவேட்டில் பேணிச் செல்லல் ஆக்கபூர்வமற்ற பலனற்ற கருமம் ஒன்றாகக் கூடும். அதே போல் அவ்வாறான பதிவேடொன்று பேணிச் செல்வதில் தேவையப்பாடும் ஏற்படாது. எவ்வாறாயினும் புதிய கணினி முறைமையினை அறிமுகப்படுத்தியதுடன் இந்த சிக்கல் தீர்க்கப்படும். | புதிய கணினி முறைமையினை விரைவாக நிறுவி நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்கள் முறைமையொன்று பேணிச் செல்ல வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாதீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் இடையே 06 வருமான விடயங்களில் 22.46 சதவீதம் முதல் 421.47 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டது. | முரண்கள் குறையக் கூடியவாறு மிகவும் தத்ரூபமான வருமான மதிப்பீடு தயாரிக்கும் படி குறிப்பிட்ட பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | மிகவும் சரியாக பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பாதீட்டுச் செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 5 செலவு விடயங்களில் 58 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டது. | பாதீட்டு செலவுகளுக்கு இணக்க முரண்கள் குறைவாகக் கூடியவாறு செலவுகள் மேற்கொள்வது தொடர்பாக அனைத்துப் பிரிவுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அதன்படி செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | மிகவும் சரியாக பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |